2018 ஜூன் 27]

அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், பேருந்து வசதிகளையும் செய்து தந்தால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க முடியும் என்பதோடு, அந்த மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தையும் உயர்த்த முடியும். எனவே, அதை சூழியல் சுற்றுலாத் தலமாக அறிவித்து, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள் கேட்ட கேள்விக்கு, சுற்றுலாத் துறையின்மூலம் அந்த குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, நிதிநிலைக்கேற்ப தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

229—

விரைவுப் பேருந்து

***7917—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, தொட்டியத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தொட்டியத்திலிருந்து சென்னைக்கு நேரடிப் பேருந்து இயக்கம் கிடையாது. இருப்பினும் தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் கரூர்-சென்னைக்கு ஒரு குளிர்சாதனப் பேருந்தும், பள்ளப்பட்டி-சென்னை, தாராபுரம்-சென்னைக்கு இரண்டு மிதவைப் பேருந்துகள் முசிறி வழியாகச் சென்னைக்கு இரு முனைகளிலிருந்தும் தலா மூன்று புறப்பாடு வீதம் 6 பேருந்துகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.

தொட்டியத்திலிருந்து சென்னைக்குச் செல்லும் பயணிகள் சுமார் 14 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள முசிறிக்கு புறநகர்ப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி வந்தடைந்து, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலமாகச் சென்னை வந்தடையலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலமகன் கண்டெடுத்த இயக்கத்திற்கு கோலமகள் சுட்டிக்காட்டிய வெற்றிச் சூத்திரம், தனக்குப் பின்னாலும் 100 ஆண்டுகளானாலும் கழகம்தான் ஆளும் என்று இதே அவையில் சூளுரைத்த எங்கள் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

எளிமையின் சிகரம், எங்கள் பாசத்திற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அமைதியின் வடிவம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முசிறி தொகுதி, தொட்டியம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதி; தொட்டியம் தனி தாலுகா உள்ளடங்கிய பகுதி, விவசாயம் நிறைந்த பகுதி; அப்பகுதியிலிருந்து சென்னைக்கு நேரடியாகச் செல்வதற்கு போக்குவரத்து வசதி இல்லை. அருகிலுள்ள முசிறிக்கோ அல்லது திருச்சிக்கோ சென்றால்தான் போக்குவரத்து வசதி உள்ளது.

2018 ஜூன் 27]

ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, தொட்டியத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக ஓர் அரசு விரைவுப் பேருந்தை இயக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தொட்டியத்திற்கு அருகிலே இருக்கக்கூடிய காட்டுப்புத்தூரிலிருந்து தினசரி இரவு 7-45 மணிக்கு சென்னைக்கு, தொட்டியம் வழியாக ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தில் நேரடியாகச் சென்னைக்குச் செல்லும் பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே, தொட்டியத்திலிருக்கக்கூடிய பயணிகள் அந்தப் பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.*

மேலும், நாமக்கல்-திருச்சி தேசிய நெடுஞ்சாலை மார்க்கத்திலுள்ள தொட்டியத்திலிருந்து முசிறி வழியாக திருச்சிக்கு புறநகர்ப் பேருந்துகள் மூலமாக தினசரி 200 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருச்சியிலிருந்து சென்னைக்கு நிறைய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இந்தப் பேருந்து வசதிகளை அந்த மக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.*

திரு. எம். செல்வராசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப்புத்தூரிலிருந்து நாமக்கல் வழியாகக் கரூரிலிருந்து சென்னை செல்லக்கூடிய பேருந்துகளில் பயணிகள் நிரம்பி காணப்படுவதால், தொட்டியத்திலிருந்து செல்வதற்கு சிரமமாக உள்ளது. ஆகவே, கேட்டதையெல்லாம் வழங்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, தொட்டியத்திலிருந்து நேரடியாக சென்னை செல்வதற்கு ஒரு விரைவுப் பேருந்தை ஏற்பாடு செய்து தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய பேருந்துகளில் பயணிகளின் அடர்வினை ஆய்வு செய்து, தேவையிருக்குமாயின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்த வழித்தடத்திலே பேருந்து இயக்குவதற்குண்டான வழியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெருமைவாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நகர் ஊராட்சி போன்ற பல ஊராட்சிகளில் மக்கள் பேருந்து வசதிகள் இல்லாமல் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள். குறிப்பாக நகரில் ஆயிரக்கணக்கானோர் பாதிப்படைந்துள்ளார்கள். ஆகவே, கோவில்வேணி-அம்மாப்பேட்டையிலிருந்து செல்லும் பேருந்துகளை நகர்-வாசுதேவமங்கலம்-பண்ணிமங்கலம் நரசிங்கமங்கலம் வழியாக சித்தமல்லிக்கு இயக்க வேண்டும். அங்கே ஓர் அரசு தொழிற்பயிற்சிப் பள்ளியும் உள்ளது. ஏற்கெனவே அந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயங்கிக்கொண்டிருந்தன. அந்தச் சாலைகள் சரியில்லாத காரணத்தால் இடையில் நிறுத்திவிட்டார்கள்; இப்போது சாலைகள் எல்லாம் சரியாகிவிட்டன. ஆகவே, தயவுசெய்து அந்தப் பழைய வழித்தடத்தை மீண்டும் தரவேண்டும். அதேபோல, ராயபுரம் செட்டிச்சத்திரம் வழியாகச் செல்லும் பேருந்து எண் 14, காளாஞ்சிமேடு பாலப் பணிகள் நடந்து கொண்டிருந்ததால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது பாலப் பணிகள் முடிந்துவிட்டன. ஆகவே, மீண்டும் காளாஞ்சிமேடு-நாவல்பூண்டி-ராயபுரம் வழியாகச் செட்டிச்சத்திரம் வழித்தடத்தில் பேருந்தினை இயக்க வேண்டும். மன்னார்குடி-தேவங்குடி பேருந்தை கருவேலங்குளம் வழியாக கற்கோவிலுக்கு நீட்டிக்கவும் ஆவன செய்ய வேண்டும்.*

2018 ஜூன் 27]

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் உங்கள் தொகுதிக்குக் கேளுங்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *இறுதியாக மன்னார்குடி அரசு கலைக் கல்லூரிக்கு ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். கலைக் கல்லூரி மாணவர்களுக்கு மன்னார்குடி பேருந்து நிலையத்திற்கு இணைப்பும், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை போன்ற பகுதி மாணவர்களுக்கு இணைப்பும் நீங்கள் செய்து தர வேண்டும். ஆகவே, இதை நீங்கள் விரைந்து செய்து தருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5, 6 கேள்விகளைக் கேட்டிருக்கிறார். ஒரு வழித்தடத்திலே சாலை வேலை நடைபெற்றதாகவும், இன்னொரு வழித்தடத்திலே பால வேலைகள் நடைபெற்றதாகவும் கூறியிருக்கிறார். இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிற அந்த வழித்தடங்களை எல்லாம் ஆய்வு செய்து, அந்த வழித்தடங்களிலே நிறுத்தப்பட்ட பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், செங்குறிச்சி ஊராட்சி, திண்டுக்கல்லில் இருந்து வல்லம்பட்டி வரை நகரப் பேருந்து செல்கிறது. அதை வலசு வரை நீட்டித்துத் தர வேண்டும். நத்தம் ஒன்றியம், பிள்ளையார் நத்தம் ஊராட்சி, கோட்டப்பட்டி வரை நகரப் பேருந்து செல்கிறது. அதை மாணவர்களின் நலன் கருதியும், விவசாயிகளுடைய நலன் கருதியும் பிள்ளையார் நத்தம் வரை நீட்டித்துத் தர வேண்டும். இரண்டு வழித்தடங்களுமே ஒரு கிலோ மீட்டர்தான் இருக்கும். காலை நேரங்களிலும், மாலை*

நேரங்களிலும் பள்ளி மாணவர்கள் செல்வதற்காக இந்தப் பேருந்து வசதியை செய்து தர ஆவன செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேருந்தினுடைய வழித்தடத்தை நீட்டிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். அது ஒரு கிலோ மீட்டர் என்றும் கூறியிருக்கிறார். அந்த வழித்தடத்தை நீட்டிக்கின்ற வாய்ப்பு இருக்குமாயின், அந்தப் பகுதியிலிருந்து மற்ற ஊர்களுக்குச் செல்லக்கூடிய மக்களுக்கு அதிலே ஆட்சேபணை இல்லாமல் இருந்தால், அந்த வழித்தடத்தை நீட்டித்துக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் இயங்குகின்ற பேருந்துகள் மழைக்காலத்தில் மிகவும் மோசமாக, ஒழுகக்கூடிய நிலையில் இருக்கின்றன. அதுவும் அந்தப் பேருந்துகள் எல்லாம் அவமலி பகுதியில் ஓடிய பழைய பேருந்துகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளில் இயங்குகின்ற பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்குவதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த 2,000 பேருந்துகளுக்கு கூண்டு கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்னும் ஒருவாரம் பொறுத்திருந்தால்,*

2018 ஜூன் 27]

தங்கள் பகுதிகளுக்குப் புதிய பேருந்துகள் புதிய பொலிவுடன் மாண்புமிகு முதலமைச்சருடைய பொற்கரங்களால் இயக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சென்னை புறநகர்ப் பகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் பயன்பெற வேண்டுமென்பதற்காக மாநகரப் பேருந்துகளை 40 கிலோ மீட்டரிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரமாக நீட்டித்து பல கிராமங்களுக்குப் புதிய பேருந்துகளை எல்லாம் நாங்கள் இயக்கினோம். ஆனால், பல பகுதிகளிலே நாங்கள் இயக்கிய அந்தப் பேருந்துகளில் நூற்றுக்கணக்கான பேருந்துகளை இப்போது நிறுத்தி வைத்ததனால் பல கிராமங்களிலே போக்குவரத்து வசதி இல்லாமல் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆக, அந்த நிறுத்தப்பட்ட பேருந்துகளை எல்லாம் இந்த அரசு மீண்டும் இயக்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இயங்கக்கூடிய நகரப் பேருந்துகளை எந்த வகையிலும் நாங்கள் நிறுத்தவில்லை. வழித்தட சீரமைப்பு என்கின்ற வகையிலே,* mofussil *பேருந்துகள் அதாவது, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகங்களும் போட்டி போட்டுக்கொண்டு 2 நிமிடங்கள், 3 நிமிடங்கள் இடைவெளிகளிலே இயக்கிக் கொண்டிருக்கின்றன. அதாவது* occupancy ratio, *பயணிகளுடைய அடர்வு இல்லாமல் இயக்கிக் கொண்டிருக்கின்றன.கூடிய பேருந்துகளைத்தான் குறைத்திருக்கிறோம். ஆக, சேமிப்பை ஏற்படுத்த போக்குவரத்துக் கழகங்களினுடைய செலவுகளைக் குறைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வழித்தடங்களைக் குறிப்பிட்டால், போக்குவரத்துத் துறை அதிகாரிகளை வைத்து*

[*2018 ஜூன் 27*

ஆய்வு செய்து, அந்த வழித்தடங்களிலே பயணிகளினுடைய அடர்வுக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, பேருந்துகளை இயக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

230—

நாட்டுப்புறக் கலைகள்

***35023—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்ட மற்றும் ஒன்றியத் தலைமையிடங்களில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நாட்டுப்புறக் கலைகளுக்கான ஊக்குவிப்பு போட்டிகள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கிறேன். இந்த வருடம் 'மண்ணின் கலை விழா' என்ற பெயரில் 32 மாவட்டங்களிலும் ரூ.64 இலட்சத்துக்கு நாட்டுப்புறக் கலைகளுக்கான கலை விழா நடத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்குச் செல்லும் கலைஞர்களுக்கு இந்த வருடம் நாம் வழங்குகின்ற பணம் ஒரு கோடி ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாயாக உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி ஒன்றிய அளவில் நடத்துவதற்கு கருத்துரு ஏதும் அரசின்பால் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.*